**குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1, ஓசூர்**
**(அத்தியாயம் XXIII குற்றவியல் விசாரணை நடைமுறைச் சட்டம்)**

**சி. சி. எண். :** 120/2014
**அ.சா. :** 1

| | | |
|---|---|---|
| பெயர் | : | வெங்கடாச்சலபதி |
| தகப்பனார் / கணவர் பெயர் | : | வெங்கடேஷ் |
| ஊர் | : | |
| வட்டம் | : | |
| ஜாதி | : | |
| தொழில் | : | |
| மதம் | : | |
| வயது | : | 32 |

1873-ஆம் ஆண்டின் மெய்யுறுதி சட்டத்தின் படி கீழ்க்கண்ட சாட்சிக்கு மெய்யுறுதி செய்து வைக்கப்பட்டது. **நாள்: 12.07.2022**

## முதல் விசாரணை :

நான் தாசனபுரத்தில் குடியிருந்து வருகிறேன். நான் கோவில் பூசாரியாக உள்ளேன். கடந்த 29.06.2014 ம் தேதி மாலை 04.00 மணியளவில் எங்கள் ஊரில் இருக்கும் வெங்கடசாமி பெருமாள் கோவிலில் பூசை செய்வதற்காக எனது இருசக்கர வாகனம் TN 70 N 5494 TVS அப்பாச்சி வெள்ளை கலர் வாகனத்தை கோவில் முன் நிறுத்திவிட்டு பூஜை முடிந்து வெளியில் வந்து பார்த்தபோது எனது இருசக்கர வாகனத்தை காணவில்லை. நான் அக்கம் பக்கத்தில் தேடி பார்த்தேன். வண்டி கிடைக்கவில்லை. அதன்பிறகு பேரிகை காவல் நிலையத்தில் வண்டி காணாமல் போனது சம்பந்தமாக புகார் கொடுத்தேன். பின்பு ஒரு மாதம் கழித்து பேரிகை காவல் நிலையத்திலிருந்து காணாமல் போன எனது இருசக்கர வாகனம் கிடைத்துவிட்டதாக காவல்

துறையினர் தகவல் தெரிவித்தார்கள். பின்பு நீதிமன்றத்தில் மனு செய்து மனு உத்தரவின்பேரில் காவல் நிலையத்திலிருந்து எனது இருசக்கர வாகனத்தை எடுத்துக்கொண்டேன். என்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். மேற்படி புகார் நான் கொடுத்த புகார்தான். <u>(மேற்படி புகார் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது). (மேற்படி புகைப்படங்கள் (2 எண்ணம்) அ.சா.பொ.1 ஆகவும் மின்தகடு அ.சா.பொ.2 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது).</u> இது சம்பந்தமாக காவல் துறையினர் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :**

நான் காவல் நிலையத்தில் அ.சா.ஆ.1 புகார் மனு அளித்தபோது என்னுடைய தந்தை வெங்கடேஷ் என்னுடன் இருந்தார். அ.சா.ஆ.1 புகார் மனுவில் நான் அடித்தல் திருத்தலோ அல்லது கூடுதலாக எதுவும் எழுதவில்லை. வழக்கு சம்பவம் நடந்த தேதியன்று நான் புகார் மனு அளிக்கவில்லை. வழக்கு சம்பவம் நடந்து ஒரு நாள் கழித்து 01.07.2014ம் தேதியன்று அ.சா.ஆ.1 புகார் மனு அளித்தேன். வழக்கு சம்பவம் நடந்த இடத்திற்கும் காவல் நிலையத்திற்கும் இடையே 16 கி.மீ. தூரம் இருக்கும். வழக்கு சம்பவம் மாலை 04.00 மணியளவில் நடந்தது. ஆகவே வழக்கு சம்பவம் நடந்த இடத்திலிருந்து வாகனத்தில் சென்றிருந்தால் அரைமணி நேரத்தில் காவல் நிலையத்தை வந்தடைந்திருக்கலாம் என்றால் சரிதான். வழக்கு சம்பவத்தில் திருடுபோன வாகனத்திற்குரிய ஆவணங்களின் அசலை அ.சா.ஆ.1 புகார் மனு அளித்த சமயத்திலேயே காவல் நிலையத்தில் தாக்கல் செய்தேன். அ.சா.ஆ.1 புகார் மனு அளித்த சமயத்தில் வழக்கு சம்பவத்தில் திருடுபோன என்னுடைய

வாகனத்திற்குரிய பதிவு ஆவணத்தினை காவல் நிலையத்தில் தாக்கல் செய்யவில்லை, அதற்கு மறுநாள்தான் தாக்கல் செய்தேன். ஆ.சா.ஆ.1 புகார மனு அளித்த அன்றைய தினமே காவல் துறையினர் என்னை விசாரித்தார்கள். வழக்கு வாகனம் யாரால் கலவாடப்பட்டது என்று எனக்கு நேரடியாக தெரயாது என்றால் சரிதான். என்னுடைய வாகனத்தினை ஆஜர் எதிரிகள் திருடவில்லை என்றாலும் காவல் துறையினர் கேட்டுக்கொண்டதற்கு இணங்கதான் சாட்சி அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை முடிக்கப்படுகிறது.**

சாட்சி கூறியதை என்னால் தட்டச்சருக்கு கூறப்பட்டு
தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியின் முன்
சாட்சிக்கு படித்து காட்டி சாட்சியால் படிக்கப்பட்டு,
சரியென ஒப்புக்கொண்டார்.

V AGAVITHAN

DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE NO.1
Digitally signed by V AGAVITHAN
Location: HOSUR

**குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1, ஒசூர்**
**(அத்தியாயம் XXIII குற்றவியல் விசாரணை நடைமுறைச் சட்டம்)**

**சி. சி. எண். : 120/2014**
**அ.சா. : 2**

| | | |
|---|---|---|
| பெயர் | : | வெங்கடேஷ் |
| தகப்பனார் / கணவர் பெயர் | : | வெங்கடாத்ரி |
| ஊர் | : | |
| வட்டம் | : | |
| ஜாதி | : | |
| தொழில் | : | |
| மதம் | : | |
| வயது | : | 54 |

1873-ஆம் ஆண்டின் மெய்யுறுதி சட்டத்தின் படி கீழ்க்கண்ட சாட்சிக்கு மெய்யுறுதி செய்து வைக்கப்பட்டது. **நாள்: 12.07.2022**

**முதல் விசாரணை :**

நான் தாசனபுரத்தில் குடியிருந்து வருகிறேன். நான் கோவில் பூசாரியாக உள்ளேன். கடந்த 29.06.2014 ம் தேதி காலை 08.00 மணியளவில் எங்கள் ஊரில் இருக்கும் வெங்கடசாமி பெருமாள் கோவிலில் பூஜை செய்வதற்காக நான் கோவிலில் இருந்தேன். எனது மகன் கோவில் பூஜை செய்வதற்காக காலை 10.00 மணியளவில் இருசக்கர வாகனம் அப்பாச்சி வெள்ளை கலர் வாகனத்தை கோவில் முன் நிறுத்திவிட்டு அரைமணி நேரம் கழித்து பூஜை முடிந்து வெளியில் வந்து பார்த்தபோது எனது மகனின் இருசக்கர வாகனத்தை காணவில்லை. நாங்கள் அக்கம் பக்கத்தில் தேடி பார்த்தோம். வண்டி கிடைக்கவில்லை. அதன்பிறகு அ.சா.1 பேரிகை காவல் நிலையத்தில் வண்டி காணாமல் போனது சம்பந்தமாக புகார் கொடுத்தார். பின்பு ஒரு மாதம் கழித்து பேரிகை காவல் நிலையத்திலிருந்து காணாமல் போன எனது மகனின் இருசக்கர வாகனம் கிடைத்துவிட்டதாக காவல் துறையினர் தகவல் தெரிவித்தார்கள். பின்பு நீதிமன்றத்தில் மனு செய்து மனு உத்தரவின்பேரில் காவல் நிலையத்திலிருந்து எனது மகனின் இருசக்கர

வாகனத்தை பெற்றுக்கொண்டார். இது சம்பந்தமாக காவல் துறையினர் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :**

நான் ஐந்தாம் வகுப்பு வரை படித்துள்ளேன். எனக்கு தமிழ் எழுதப்படிக்க தெரியாது. காவல் நிலையத்தில் அ.சா.ஆ.1 புகார் மனு அளித்த சமயத்தில் நான் என் மகன் அ.சா.1 உடன் காவல் நிலையத்திற்கு சென்றிருந்தேன். வழக்கு சம்பவத்தில் திருடுபோன வாகனம் காலை 11.00 மணியளவில் திருடுபோனது. 29.06.2016 ம் தேதியன்று அ.சா.1 ன் வாகனம் திருடுபோனது. வழக்கு சம்பவத்தில் திருடுபோன வாகனம் குறித்து மறுநாள்தான் காவல் நிலையத்தில் புகார் அளித்தோம். அ.சா.ஆ.1 புகார் மனு அளித்த அன்றே காவல் துறையினர் எங்களை விசாரித்தனர். அதன்பின்பும் தொடர்ச்சியாக எங்களை விசாரித்தனர். ஆகவே இவ்வழக்கு சம்பவத்தில் திருடுபோன வாகனத்தினை யார் திருடினார்கள் என்ற விவரம் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். வழக்கு சம்பவத்தில் திருடுபோன வாகனம் என்னுடைய மகன் அ.சா.1 ன் உடையது என்ற காரணத்திற்காக எதிரிகளுக்கு எதிராக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. ஆஜர் எதிரிகளுக்கும் வழக்கு சம்பவத்திற்கு எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை முடிக்கப்படுகிறது.**

**சாட்சி கூறியதை என்னால் தட்டச்சருக்கு கூறப்பட்டு
தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியின் முன்
சாட்சிக்கு படித்து காட்டி சாட்சியால் படிக்கப்பட்டு,
சரியென ஒப்புக்கொண்டார்.**

V AGAVITHAN

DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE NO.1
Digitally signed by V AGAVITHAN
Location: HOSUR

**குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1, ஒசூர்**

**(அத்தியாயம் XXIII குற்றவியல் விசாரணை நடைமுறைச் சட்டம்)**

**சி. சி. எண். :** 120/2014

**அ.சா. :** 3

| | | |
|---|---|---|
| பெயர் | : | முனிராஜ் |
| தகப்பனார் / கணவர் பெயர் | : | பூஞ்சப்பா |
| ஊர் | : | |
| வட்டம் | : | |
| ஜாதி | : | |
| தொழில் | : | |
| மதம் | : | |
| வயது | : | 60 |

1873-ஆம் ஆண்டின் மெய்யுறுதி சட்டத்தின் படி கீழ்க்கண்ட சாட்சிக்கு மெய்யுறுதி செய்து வைக்கப்பட்டது. **நாள்: 12.07.2022**

## முதல் விசாரணை :

நான் தாசனப்புரத்தில் குடியிருக்கிறேன். அ.சா.1 மற்றும் 2 ஐ தெரியும். அ.சா.2 எனது மச்சான் ஆவார். கடந்த 29.06.2014 ம் தேதி மாலை 04.00 மணியளவில் நான் கோவிலில் இருந்தேன். அப்போது என் மச்சான் மகனின் இருசக்கர வாகனம் காணவில்லை என்று சொன்னார்கள். மேற்படி இருசக்கர வாகனம் கோவிலுக்கு அருகிலேயே நிறுத்தப்பட்டிருந்தது. காணாமல் போன இருசக்கர வாகனத்தை அக்கம் பக்கத்தில் தேடி பார்த்தும் கிடைக்கவில்லை. அதனால் அடுத்தநாள் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தோம். இது சம்பந்தமாக காவல் துறையினர் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :**

நான் படிக்கவில்லை. அ.சா.ஆ.1 புகார் அளித்த சமயத்தில் அ.சா.2 வெங்கடேஷ், அ.சா.1 வெங்கடாசலபதி, வெங்கட்ராஜ் மற்றும் நான் ஆகிய 4 பேரும் காவல் நிலையத்திற்கு சென்றிருந்தோம். வழக்கு சம்பவம் நடந்து ஒரு நாள் கழித்துதான் அ.சா.ஆ.1 புகார் மனு அளித்தோம். வழக்கு சம்பவத்தன்று எந்த புகாரும் அளிக்கவில்லை என்றால் சரிதான். ஆகவே வழக்கு சம்பவத்தில் திருடுபோன வாகனத்தினை யார் திருடினார் என்ற விவரம் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். வழக்கு சம்பவத்தன்று நான் கோவிலில் இல்லை என்றாலும் அ.சா.1 மற்றும் அ.சா.2 கேட்டுக்கொண்டதற்கு இணங்கதான் அவர்கள் என்னுடைய உறவினர் என்ற காரணத்தினால் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. தற்பொழுது நான் சாட்சியம் அளித்த விவரத்தைதான் காவல் துறையினரின் விசாரணையின்போதும் தெரிவித்திருந்தேன். வழக்கு சம்பவத்திற்கும் ஆஜர் எதிரிகளுக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை முடிக்கப்படுகிறது.**

**சாட்சி கூறியதை என்னால் தட்டச்சருக்கு கூறப்பட்டு**
**தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியின் முன்**
**சாட்சிக்கு படித்து காட்டி சாட்சியால் படிக்கப்பட்டு,**
**சரியென ஒப்புக்கொண்டார்.**

V AGAVITHAN

DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE NO.1
Digitally signed by V AGAVITHAN
Location: HOSUR

**குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1, ஓசூர்**
**(அத்தியாயம் XXIII குற்றவியல் விசாரணை நடைமுறைச் சட்டம்)**

**சி. சி. எண். : 120/2014**
**அ.சா. : 4**

| | | |
|---|---|---|
| பெயர் | : | வெங்கட்ராஜ் |
| தகப்பனார் / கணவர் பெயர் | : | பீமன்னா |
| ஊர் | : | |
| வட்டம் | : | |
| ஜாதி | : | |
| தொழில் | : | |
| மதம் | : | |
| வயது | : | 32 |

1873-ஆம் ஆண்டின் மெய்யுறுதி சட்டத்தின் படி கீழ்க்கண்ட சாட்சிக்கு மெய்யுறுதி செய்து வைக்கப்பட்டது. **நாள்: 12.07.2022**

## முதல் விசாரணை :

நான் தாசனப்புரத்தில் குடியிருக்கிறேன். நான் விவசாயம் செய்து வருகிறேன். அ.சா.1 ஐ எனக்கு தெரியும். கடந்த 29.06.2014 ம் தேதி அ.சா.1 ன் அப்பாச்சி இருசக்கர வாகனம் வெங்கடரமணசாமி கோவில் முன்பு நிறுத்தப்பட்டிருந்த இருசக்கர வாகனம் காணாமல் போய்விட்டதாக மாலை சுமார் 04.00 மணியளவில் எனக்கு போன் மூலம் தகவல் கூறினார். நான் சம்பவ இடம் சென்று அக்கம் பக்கத்தில் தேடி பார்த்தேன். கிடைக்கவில்லை. பிறகு பேரிகை காவல் நிலையத்தில் புகார் கொடுத்தோம். பிறகு ஒரு மாதம் கழித்து வண்டி கிடைத்துவிட்டதாக காவல் நிலையத்திலிருந்து தகவல் சொன்னார்கள். பின்பு வாகனத்தை நீதிமன்ற உத்தரவின்பேரில் அ.சா.1 பெற்றுக்கொண்டார். அ.சா.ஆ.1 புகார் மனு கொடுத்த அடுத்த நாள் காவல்

துறையினர் சம்பவ இடத்தை பார்வையிட்டு வரைப்படம் வரைந்து பார்வை மகஜர் தயார் செய்தார்கள். அதில் நான் கையொப்பம் செய்தேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள முதல் கையெழுத்து என்னுடையதுதான். **(மேற்படி பார்வை மகஜர் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** இது சம்பந்தமாக காவல் துறையினர் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :**

நான் பீ.காம் பட்டப்படிப்பு படித்துள்ளேன். எனக்கு தமிழ் எழுதப்படிக்க தெரியாது. வழக்கு சம்பவம் குறித்து எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரியல்ல. சம்பவம் நடந்த அன்று மாலை 04.00 மணியளவில் அ.சா.1 எனக்கு கைபேசி மூலம் அவருடைய வழக்கு சம்பவத்தில் வாகனம் திருடுபோனது குறித்து தகவல் தெரிவித்தார். அ.சா.ஆ.1 புகார் மனு அளித்த சமயத்தில் நான் அ.சா.1 உடன் காவல் நிலையத்திற்கு சென்றிருந்தேன். அ.சா.ஆ.1 புகார் மனு அளித்த சமயத்தில் நானும் அ.சா.1 வெங்கடாசலபதியும் மட்டுமே காவல் நிலையத்திற்கு சென்றிருந்தோம். காவல் நிலையத்தில் வைத்துதான் அ.சா.ஆ.1 புகார் மனுவில் கையொப்பம் இட்டேன். இவ்வழக்கு பட்டியல் சாட்சி அனைவரையும் என்னை விசாரித்த சமயத்திலேயே காவல் நிலையத்தில் காவல் துறையினர் விசாரித்தனர். என்னுடன் யார் கையொப்பம் இட்டனர் என்ற விவரம் எனக்கு தெரியாது. அ.சா.ஆ.2 பார்வை மகஜரில் உள்ள 2 வது கையெழுத்து யாருடையது என்ற விவரம் எனக்கு தெரியாது. அ.சா.1 என்னுடைய உறவினர் ஆவார். வழக்கு சம்பவத்தைபற்றி எனக்கு

எதுவும் தெரியாது என்றாலும் அ.சா.1 மற்றும் அ.சா.2 கேட்டுக்கொண்டதற்கு இணங்கதான் அவர்கள் என்னுடைய உறவினர் என்ற காரணத்தினால் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. தற்பொழுது நான் சாட்சியம் அளித்த விவரத்தைதான் காவல் துறையினரின் விசாரணையின்போதும் தெரிவித்திருந்தேன். வழக்கு சம்பவத்திற்கும் ஆஜர் எதிரிகளுக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை முடிக்கப்படுகிறது.**

**சாட்சி கூறியதை என்னால் தட்டச்சருக்கு கூறப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியின் முன் சாட்சிக்கு படித்து காட்டி சாட்சியால் படிக்கப்பட்டு, சரியென ஒப்புக்கொண்டார்.**

V AGAVITHAN

DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE NO.1
Digitally signed by V AGAVITHAN
Location: HOSUR